**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, KARUR.**

**MCOP.NO. 261/ 2022**

Deposition of PW -2 solemnly affirmed by S.Vidya Priya, Bench Clerk Grade-II of this court on 26.02.2026 in accordant with provisions of XLIV of 1989.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | டாக்டர் திரு.அன்பழகன் | Age | : | |
| Father's Name | : | | Village | : | |
| Calling | : | | Taluk | : | |

**முதல் விசாரணை**

நான் கரூர் ராஜ் ஆர்த்தோ மருத்துவமனையில் எலும்பு முறிவு சிறப்பு மருத்துவராக பணிபுரிகின்றேன். நான் கடந்த 13.01.2022–ம் தேதியன்று பணியில் இருந்தபோது திரு.மூர்த்தி, த/பெ.வெங்கடசாமி என்பவர் சாலை விபத்து ஏற்பட்டு சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டார். அப்போது பணியில் இருந்த நான் அவரை பரிசோதனை செய்து பார்த்ததில் அவரது இடது கால் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது. அதற்காக அவருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு ஆணி பொருத்தப்பட்டிருந்தது. அவர் என்னிடம் 13.01.2026–ம் தேதியன்று மாலை 6.30 மணியளவில் ஊனச்சான்று வாங்குவதற்காக வந்தார். அப்போது அவரை பரிசோதனை செய்து பார்த்ததில் அவரது இடது கால் எலும்பு வலியுடன் காணப்பட்டது. முழங்கால் மூட்டுக்கள் மற்றும் கணுக்கால் மூட்டுக்கள் வலியுடனும் அதை சுற்றியுள்ள சதை பகுதிகள் சூம்பிய நிலையில் இருந்தது. அவரால் நீண்ட துூரம் நடக்க முடியாமலும் மற்றும் அவர் முன்பு போல் வலுவான வேலைகள் எதுவும் செய்ய முடியாமல் இருந்தார். அவருக்கு முன்புபோல் படிக்கட்டுகளில் ஏறி இறங்குவதற்கு சிரமம் இருந்தது. இவை யாவற்றையும் கணக்கில் கொண்டு அவரது ஊனத்தின் சதவீதம் 32 சதவீதம் என்று கணக்கிட்டு சான்றிதழ் வழங்கியுள்ளேன். இடது காலில் பொருத்தப்பட்ட ஆணி மட்டும் உள்ளது. அதை நீக்குவதற்கு ஒரு அறுவை சிகிச்சை செய்யவேண்டும். அதற்கு ரூ.40 ஆயிரம் வரை செலவாகும். நான் வழங்கிய **ஊனச்சான்று ம.சா.ஆ.8** ஆகும். **நுண்கதிர்படம் ம.சா.ஆ.9** ஆகும். இடது கால் எலும்பு முறையாக கூடவில்லை. உடல் உழைப்பு மூலம் வருமானம் ஈட்டக்கூடிய நபராக இருந்தால் முன்பு போல் அவரால் வேலை செய்ய முடியாது. மனுதாரருக்கு ஏற்பட்டுள்ளது நிரந்தர ஊனம் ஆகும். நாட்கள் கடந்துவிட்டதால் முழுவதும் குணமாவதற்கு வாய்ப்பு குறைவு.

**2–ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

மனுதாரர் ஏற்கனவே சிகிச்சை பெற்று விடுவிக்கப்பட்ட பின்பு மீண்டும் அவர் 13.01.2026–ம் தேதிதான் ஊனச்சான்று பெறுவதற்காக வந்தார் என்றால் சரிதான். அவருக்கு நல்ல முறையில்தான் சிகிச்சை அளிப்பட்டு விடுவிக்கப்பட்டார். அவருக்கு எலும்புகள் நன்றாக குடியிருந்தது. எலும்பு முறிவு

ஏற்பட்டு 40 நாட்கள் கழித்து எந்த இடத்தில் சரியாக எலும்பு முறிவு ஏற்பட்டது என்று கணிக்க முடியாது என்றால் சரியல்ல. ஊனச்சான்று வழங்கியபோது அறிவியல் ரீதியான பரிசோதனை எதுவும் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். மனுதாரர் ஏற்கனவே சிகிச்சையில் இருந்து விடுவிக்கப்பட்டபோது அவருக்கு இரத்தம் குறைவாக இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு இருக்கலாம். மனுதாரர் கேட்டுக் கொண்டதற்காக அவருக்காக ஊனத்தை மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. ஊனச்சான்றுடன் தனியாக கணக்கீட்டுத்தாள் இணைக்கவில்லை என்றால் சரிதான். மனுதாரர் சொன்னதன் அடிப்படையில்தான் அவருக்கு வலி இருப்பதாக தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான்.

| | |
|---|---|
| | சாட்சி கூறிய சாட்சியத்தை எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சுசெய்யப்பட்டு, பின்னர் சாட்சியிடம் படித்துக் காட்டி சரியாக உள்ளது என்று ஒப்புக் கொண்டு சாட்சியால் கையெழுத்திடப்பட்டது.<br>(ஒம்.என்.எஸ்.ஜெயபிரகாஷ்)<br>தலைமை குற்றவியல் நடுவர்,<br>கரூர். |